**எத்தியோப்பிய நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றினார் (டிசம்பர் 17, 2025)**

டிசம்பர் 17, 2025

பிரதமர் இன்று எத்தியோப்பிய பாராளுமன்றத்தின் கூட்டு அமர்வில் உரையாற்றினார்.எத்தியோப்பியாவிற்கான இந்த முதல் இருதரப்பு வருகை பிரதமருக்கு ஒரு சிறப்பு கௌரவமாக இருந்தது.

2. பிரதமர் தனது உரையைத் தொடங்கும்போது, இந்தியாவின் மக்கள் சார்பாக எத்தியோப்பியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்பு மற்றும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதும், இந்த ஜனநாயகக் கோயிலின் மூலம் எத்தியோப்பியாவின் பொதுமக்களான விவசாயிகள், தொழில்முனைவோர், பெருமைமிக்க பெண்கள் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் இளைஞர்களுடன் பேசுவதும் தனக்குக் கிடைத்த ஒரு பாக்கியம் என்று அவர் குறிப்பிட்டார். எத்தியோப்பியாவின் மிக உயரிய விருதான 'கிரேட் ஹானர் நிஷான் ஆஃப் எத்தியோப்பியா'வை தனக்கு வழங்கியதற்காக, எத்தியோப்பிய மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் அவர் நன்றி தெரிவித்தார். இந்த உறவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இரு நாடுகளுக்கும் இடையேயான பன்னெடுங்கால உறவுகள் இந்த வருகையின் போது ஒரு உத்திசார் கூட்டாண்மையாக மேம்படுத்தப்பட்டதில் பிரதமர் திருப்தியை வெளிப்படுத்தினார்.

3. இந்தியா மற்றும் எத்தியோப்பியா இடையே உள்ள நாகரிக உறவுகளை நினைவுகூர்ந்த பிரதமர், இரு நாடுகளும் நவீன லட்சியத்துடன் பண்டைய ஞானத்தை இணைக்கின்றன என்பதை கோடிட்டுக் காட்டினார். இந்த சூழலில், இந்தியாவின் தேசிய பாடலான "வந்தே மாதரம்" மற்றும் எத்தியோப்பிய தேசிய கீதம் இரண்டும் தங்கள் தாய் நிலத்தை போற்றுகின்றன என்பதை அவர் குறிப்பிட்டார். இரு நாடுகளின் பகிரப்பட்ட போராட்டத்தை பாராட்டி, 1941-யில் தங்கள் விடுதலைக்காக சக எத்தியோப்பியர்களுடன் போராடிய இந்திய வீரர்களின் பங்களிப்பை பிரதமர் எடுத்துரைத்தார். எத்தியோப்பிய மக்களின் தியாகங்களை அடையாளம் காட்டும்

அட்வா வெற்றி நினைவுச மாளிகைக்கு அவர் மரியாதை செலுத்துவதில் அவருக்கு மிகுந்த பெருமை என்று அவர் கூறினார்.

4.இந்தியா-எத்தியோப்பியா கூட்டாண்மையை மேம்படுத்தி, மேலும் வலுப்படுத்த இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதமர் தெரிவித்தார். இது தொடர்பாக, எத்தியோப்பியாவின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் இந்திய ஆசிரியர்களும் இந்திய வணிக நிறுவனங்களும் ஆற்றிய பங்களிப்பை அவர் நினைவு கூர்ந்தார். டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, உணவுப் பதப்படுத்துதல் மற்றும் புத்தாக்கம் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவின் வளர்ச்சி அனுபவங்களை அவர் பகிர்ந்துகொண்டார். மேலும், எத்தியோப்பாவின் முன்னுரிமைகளுக்கு ஏற்ப, அந்நாட்டிற்குத் தனது வளர்ச்சி ஆதரவைத் தொடர இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 'வசுதைவ குடும்பகம்' [உலகமே ஒரு குடும்பம்] என்ற தனது கொள்கையில் பொதிந்துள்ளபடி, மனிதகுலத்திற்குச் சேவை செய்வதில் இந்தியாவின் அர்ப்பணிப்பை எடுத்துரைத்த அவர், கோவிட் பெருந்தொற்று காலத்தில் எத்தியோப்பியாவுக்கு தடுப்பூசிகளை வழங்கியது இந்தியாவிற்கு கிடைத்த ஒரு பாக்கியம் என்று குறிப்பிட்டார்.

5. உலகளாவிய தெற்கு நாடுகளாகிய இந்தியாவும் எத்தியோப்பியாவும், வளரும் நாடுகளுக்கு அதிக குரல் கொடுப்பதற்காக ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தை வலுப்படுத்துவதில் காட்டிய ஒருமைப்பாட்டிற்காக அவர் எத்தியோப்பாவிற்கு நன்றி தெரிவித்தார்.

6. ஆப்பிரிக்க ஒற்றுமைக் கனவுகளை நனவாக்குவதில் ஆப்பிரிக்க ஒன்றியத்தின் தலைமையகமான அடிஸ் அபாபாவின் முக்கியப் பங்கை எடுத்துரைத்த பிரதமர், தனது தலைமைத்துவத்தின் போது G20 அமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியத்தை ஒரு நிரந்தர உறுப்பினராக வரவேற்பதில் இந்தியா பெருமை கொள்வதாகத் தெரிவித்தார். தமது 11 ஆண்டுகால ஆட்சியின் கீழ், இந்தியா-ஆப்பிரிக்கா உறவுகள் பன்மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளதாகவும், இரு தரப்பு நாடுகளின் தலைவர்கள் மட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட பயணப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். ஆப்பிரிக்காவின்

வளர்ச்சிக்கு இந்தியாவின் ஆழமான அர்ப்பணிப்பு குறித்து அவர் சிந்தித்தார், மேலும் அந்த கண்டத்தில் ஒரு மில்லியன் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக "ஆப்பிரிக்கத் திறன் பெருக்கி முன்முயற்சி"யைத் தொடங்குவது குறித்து ஜோகன்னஸ்பர்க் G-20 உச்சிமாநாட்டில் தாம் முன்வைத்த திட்டத்தை அவர் வலியுறுத்தினார்.

7. உலகளாவிய தெற்கு நாடுகள் தங்களின் சொந்த விதியைத் தாங்களே எழுதுகின்றன என்று குறிப்பிட்ட பிரதமர், ஒரு சக ஜனநாயக நாட்டுடன் இந்தியாவின் பயணத்தைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்ததற்காக மாண்புமிகு சபாநாயகருக்கு நன்றி தெரிவித்தார்.

அடிஸ் அபாபா

டிசம்பர் 17, 2025